

கோவை, காரமடை ரங்கநாதர் கோவில் உலகப் பிரசித்தி பெற்றது. காரணம், இங்கு நடக்கும் பந்த சேவை, கவாள சேவைதான். இக்கோயிலில் ஆண்டு தோறும் நடக்கும் மாசி மகத் தேரோட்டத்துக்கு மறுநாள் அரங்கேறும் கவாள சேவையில் தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்கில் பக்தர்கள் கலந்து கொள்வார்கள். மாசி மகத் தேரோட்டத்திற்கு மறுநாள் இந்தக் கவாள சேவை நடக்கும். இதில் ஆயிரக்கணக்கில் தாசர்கள் கலந்து கொள்வார்கள். குழந்தை இல்லாத தம்பதியினர் இந்தக் கவாள சேவையில் கலந்துகொண்டு, தாசர்களுக்குப் படையலிட்டு அவர்கள் தரும் பிரசாதத்தை உண்டால் குழந்தைப் பாக்கியம் கிட்டும் என்பது ஐதீகம். அப்படி இந்த வருடம் நடந்த கவாள சேவையில், தாசர்கள், பெண் பக்தர்களுக்கு வாயோடு வாய் வைத்துப் பழத்தைக் (பிரசாதம்) கொடுத்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இப்படிப் பழம் ஊட்டும் காட்சியைப் பார்க்கும் பிற பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் கூட, ‘அடப் பாவிகளா? இதெல்லாம் என்ன கூத்து?’ என்று ஆவேசப்படுகிறார்கள். ஆனால் இந்த தாசர்கள் வாழும் பகுதியிலோ ‘இதெல்லாம் சகஜமப்பா’ என்ற ரீதியில்தான் இருக்கிறது.

பா.பிரதீப்குமார்

சரி, விஷயத்திற்குப் போகும் முன் யார் இந்த தாசர்கள் என ப் பார்ப்போம்.

அடியார்களுக்கு அடியார்களான இந்த தாசர்கள் (தாசர் என்றால் ‘இறைவனின் அடிமை’ எனப் பொருள்) துளசி மணிமாலை அணிந்து இருப்பார்கள். நெற்றி நிறையப் பொட்டுடன் காவி அல்லது மஞ்சள் வேட்டி தறித்து சங்கு, சேகண்டியுடன் கோயில் முன் அமர்ந்திருப்பார்கள். இவர்கள் முன் வாழை இலை விரித்து வைக்கப்பட்டிருக்கும். ரங்கநாதரை வழிபட வரும் பெண்கள், குறிப்பாக குழந்தை வரம் வேண்டி வரும் பெண் பக்தர்கள் பழம், சர்க்கரை, கடலையை இலையில் வைத்து தாசர்கள் முன்பாக

# “வாயில் வச்சுக் கொடுப்ப

நிற்பார்கள். அந்தப் படையலுக்கு தேங்காய் உடைத்து, கற்பூர ஆராதனைக் காண்பித்து பூஜை செய்யும் தாசர்கள், படையலை உண்டு வாயில் இருக்கும் மீதியை பிரசாதமாக பெண்களுக்கு வழங்குவார்கள் (இது முன்பிருந்த நிலை). இல்லையென்றால் பெண்கள் படையலை தாசர்களுக்கு ஊட்டி, தாங்களும் உண்டு மகிழ்வார்கள். இப்படி உணவு உண்ட பிறகு ரங்கநாதரை வழிபட்டால், குழந்தைப் பாக்கியம் கிட்டும் என்பது ஐதீகம்.

இனி இப்போதைய மேட்டருக்கு வருவோம். இது மாதிரி பழத்தை (பிரசாதத்தை) பெண்கள் வாயில் வாயோடு வாய் வைத்து தாசர்கள் ஊட்டப் போய்த்தான் தற்போது பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ‘ஏன் இப்படி செய்கிறீர்கள்? இது பார்ப்பதற்கு அருவருப்பாக இல்லையா?’ -நாம் கோயிலில் இருக்கும் தாசர்கள் சிலரிடம் பேச்சுக் கொடுத்தோம்.

முதலில் அன்னூர், கரியாம்பாளையத்தைச் சேர்ந்த பழனி என்ற தாசரிடம் பேசினோம். “நான் 25 வருஷமா இங்கே தாசராக இருக்கேன். என் பையன் சின்ன வயசுல விளையாடிட்டு இருக்கும் போது பெரிய ஆணியை விழுங்கிட்டான். ஆஸ்பத்திரிக்கெல்லாம் கூட்டிட்டுப் போய் பார்த்தும் பிரயோஜனமில்லை. இங்க வந்து ரங்கநாதர்கிட்ட வேண்டினேன். என்ன அதிசயம், பையன் வாயில் இருந்த ஆணி அதுவா வெளியே வந்துச்சு. என் பையனை ரங்கநாதர் பொழைக்க வச்சதால், முத்திரி (முத்திரை) குத்தி தாசரா ஆயிட்டேன்” என்றவரிடம், “இப்படி நீங்கள் சாப்பிட்ட எச்சிலை பெண்களுக்குக் கொடுக்கலாமா... அவுங்களுக்கு அருவருப்பு ஏற்படாதா?” எனக் கேட்டோம். “வாயில் வச்சு கொடுத்தாதான் விசேஷம். இதுல அருவருப்பு கிடையாது. அந்தப் பிரசாதத்தை வாங்கும் பெண்கள் கீழே துப்பக்கூடாது. அப்படி செஞ்சா வேண்டுதல் நிறைவேறாமப் போய்டும். இதைத்தான் கவாளப் பூஜைன்னு சொல்வோம். கவாளம் வாங்குனாதான் ரங்கநாதர் பாக்கியம் கொடுப்பார். அதுல என்ன பிரச்சினை இருக்கு?” என்றார் ஓரே போடாக.



பழனிச்சாமி



பழனியம்மாள்



பழனி